# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1687/30 - 2011 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.01.06

*1687/30 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (1) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

**கட்டளை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9அ பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் மே மாதம் 12ஆந் திகதிய 453/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், பின்னர் 1999 ஆம் ஆண்டின் மார்ச் 17ஆந் திகதிய 1071/8 ஆம் இலக்கமுடையதும், 2011 ஆம் ஆண்டின் சனவரி 03 ஆந் திகதிய 1687/3 ஆம் இலக்கமுடையதுமான அதி விஷேட வர்த்தமானிகளில் திருத்தியமைக்கப்பட்டதுமான அக்கரைப்பற்று பிரதேச சபையின் அமைத்துருவாக்கம் சம்பந்தமான கட்டளையை, இக்கட்டளை மூலம்,*

*(1) (அ) அதன் அட்டவணையை நீக்கி அதற்குப் பதிலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் ;*

*(ஆ) அதன் (4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஒன்பது பேர்' எனும் பதங்களை நீக்கி அதற்குப் பதிலாக 'ஐந்து பேர்' எனும் பதங்களை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*(2) குறித்த திருத்தங்கள் 2011, ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று விதித்துரைக்கின்றேன்.*

*ஏ. எல். எம். அதாஉல்லா,*
*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.*

*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,*
*கொழும்பு,*
*2011, சனவரி 04.*

**அட்டவணை**

**பகுதி - I**

**அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கீழ்க்காணும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணிப்பிரதேசம்:-**

*பட்டியடிப்பிட்டி* (AP/20/A), *பள்ளிக்குடியிருப்பு-01* (AP/20A/1), *பள்ளிக்குடியிருப்பு-02* (AP/20A/2), *இசங்கணிச்சீமை* (AP/20A/3), *ஆலிம் நகர்* (AP/20A/4).

**பகுதி - II**

**அக்கரைப்பற்று பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள்:**

வடக்கு :

வலதுகரை பிரதான நீர்ப்பாசன வாய்க்கலும் பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்காலும் சந்திக்கும் புள்ளியிலிருந்து, வலதுகரை பிரதான வாய்க்காலின் மத்திய கோட்டினூடே கிழக்கு நோக்கி 32ம் வலது கரை நீர்ப்பாசன வாய்க்கால் வரை சென்று அங்கிருந்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நடைமுறையிலுள்ள தெற்கு எல்லையினூடாக கிழக்கு நோக்கிச்சென்று, பட்டியடிப்பிட்டி பாலத்தின் மத்திய புள்ளியிலிருந்து வடக்கு நோக்கி தில்லை ஆற்றினூடாக செல்லும் கோடு சந்திக்கும் புள்ளி வரையும்;

கிழக்கு :

இறுதியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி தில்லை ஆற்றினூடாக பட்டியடிப்பிட்டி பாலத்தின் மத்திய புள்ளி வரையும்;

தெற்கு :

இறுதியாக கூறப்பட்ட பட்டியடிப்பிட்டி பாலத்தின் மத்திய புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி தில்லை ஆற்றின் மத்திய கோட்டினுடாக 31ம் வலது கரை நீர்ப்பாசன வாய்க்காலும் தில்லை ஆறும் சந்திக்கும் புள்ளிவரை சென்று (பட்டியடிப்பிட்டி கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) அங்கிருந்து 31ம் வலது கரை வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக அவ்வாய்க்காலும் 14ம் பனங்காட்டு வாய்க்காலும் சந்திக்கும் புள்ளி வரை சென்று அப்புள்ளியிலிருந்து 14ம் பனங்காட்டு வாய்க்காலின் மத்திய புள்ளியினூடாக (ஆலிம் நகர் கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) மேற்கு நோக்கி பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் வரை சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக 13ம் பனங்காட்டு வாய்க்கால் வரை சென்று அங்கிருந்து அவ் 13ம் பனங்காட்டு வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக தென்கிழக்கு திசை நோக்கி ஆனைவிழுந்தான் வட்டையின் கிழக்குப்புற அணைக்கட்டுவரை சென்று அங்கிருந்து இவ் அணைக்கட்டு வழியே தென்மேற்கு திசை நோக்கி நீத்தையாறு வரை சென்று அப்புள்ளியிலிருந்து தென்மேற்குத் திசை நோக்கி கருப்பாவெளி வாய்க்கால் வரை சென்று, அங்கிருந்து கருப்பாவெளி வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக தற்போதுள்ள வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள தமண பிரதேச செயலக எல்லை வரையும்;

மேற்கு :

இறுதியாகக் கூறப்பட்ட புள்ளியிலிருந்து வடக்கே தற்போதுள்ள வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள தமண பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையினூடாக தற்போதுள்ள வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள இறக்காமப் பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு எல்லையின் இறுதிப்புள்ளி வரை சென்று அங்கிருந்து வாங்காமம் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக 4ம் வாங்காமம் வாய்க்கால் வரை சென்று அங்கிருந்து கிழக்கு நோக்கி அவ் 4ம் வாங்காமம் வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக 3.5ம் வாய்க்காலை சந்தித்து அவ் 3.5ம் வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக கிழக்கு நோக்கி இலுக்குச்சேனை குளத்தின் தென்புற எல்லையும் இவ் 3.5ம் வாங்காமம் வாய்க்காலும் சந்திக்கும் புள்ளிவரை சென்று அங்கிருந்து வடக்கு நோக்கி இலுக்குச் சேனை குளத்தின் மேற்கு எல்லையூடாக பனங்காட்டு கிளை வாய்க்காலும் இலுக்குச்சேனை குளமும் சந்திக்கும் புள்ளிவரை சென்று அங்கிருந்து வடக்கு நோக்கி அந்த பனங்காட்டு கிளை வாய்க்காலின் மத்திய கோட்டினூடாகச் சென்று அக்கரைப்பற்று - அம்பாரை பிரதான வீதியிலுள்ள 13/2 மதகைச் சந்தித்து அங்கிருந்து அக்கரைப்பற்று - அம்பாரை வீதியின் மத்திய கோட்டினூடாக வடக்கு நோக்கி அம்பாரை - அக்கரைப்பற்று வீதியில் அமைந்துள்ள மேட்டு நிலம் வரை சென்று அம் மேட்டு நிலத்தின் தென்புற எல்லையினூடாக கிழக்கு நோக்கி பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்கால் வரை சென்று அப்புள்ளியிலிருந்து பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்காலின் மத்திய கோட்டினூடாக வடக்கு நோக்கிச் சென்று அப் பனங்காட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்காலும் வலது கரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலும் சந்திக்கும் புள்ளி வரையும்.

*01 - 414 /1*

---

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

**கட்டளை**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252ஆம் அத்தியாயமான) 2ஆம், 3ஆம், 5ஆம் மற்றும் 9ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

(1) இதற்கான அட்டவணையின் I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பை அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்கென மாநகரப் பிரதேசமொன்றாக வெளிப்படுத்துகின்றேன்;

(2) குறித்த மாநகர சபை பிரதேசத்தின் நிருவாக எல்லைகள் அட்டவணையின் II ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளாகவிருத்தல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன்;

(3) இக்கட்டளையின் (I) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாநகர சபைக்கு பின்வரும் பெயரையும், பதவிப்பெயரையும் குறித்தொதுக்குகின்றேன்:

**"அக்கரைப்பற்று மாநகர சபை"**

(4) அக்கரைப்பற்று மாநகர சபையானது, நகர முதல்வரையும், பிரதி நகர முதல்வரையும் வேறு தெரிவுசெய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதித்துரைக்கின்றேன்;

(5) அக்கரைப்பற்று மாநகர சபையின் பதவிக்காலம் ஆரம்பமாகவேண்டிய திகதியாக 2011ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் முதலாம் திகதியையும் நிர்ணயிக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 04.

**அட்டவணை**

**பகுதி - I**

**அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கீழ்க்காணும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணிப்பிரதேசம்:--**

நகர்ப் பிரிவு-01 (AP/15A), நகர்ப் பிரிவு-02 (AP/15A/1), நகர்ப் பிரிவு-03 (AP/15A/2), நகர்ப் பிரிவு-04 (AP/15A/3), நகர்ப் பிரிவு-05 (AP/15A/4), அக்கரைப்பற்று-01 (AP/15), அக்கரைப்பற்று-02 (AP/16), அக்கரைப்பற்று-03 (AP/17), அக்கரைப்பற்று-04 (AP/18), அக்கரைப்பற்று-05 (AP/19), அக்கரைப்பற்று-06 (AP/20), அக்கரைப்பற்று-10 (AP/15/1), அக்கரைப்பற்று-11 (AP/15/2), அக்கரைப்பற்று-12 (AP/15/3), அக்கரைப்பற்று-13 (AP/15/4), அக்கரைப்பற்று-14 (AP/15/5), அக்கரைப்பற்று-15 (AP/16A), அக்கரைப்பற்று-16 (AP/17A), அக்கரைப்பற்று-17 (AP/18A), அக்கரைப்பற்று-18 (AP/19A), அக்கரைப்பற்று-19 (AP/18/19/20), அக்கரைப்பற்று-20 (AP/20/1), அக்கரைப்பற்று-21 (AP/20/2).

**பகுதி - II**

**அக்கரைப்பற்று மாநகர சபையின் நிர்வாக எல்லைகள்:**

வடக்கு :

பட்டியடிப்பிட்டி பாலத்தின் மத்திய புள்ளியிலிருந்து தில்லையாற்றினூடாக நேர் வடக்கே செல்லும் கோடு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நடைமுறையிலுள்ள தெற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி யிலிருந்து, கிழக்கு நோக்கி அவ் எல்லை வழியே பாவா வீதியை அடைந்து, அவ்வீதியூடாக அக்கரைப்பற்று - கல்முனை பெருந்தெரு வரை சென்று அங்கிருந்து வடிச்சல் வீதியின் மத்திய கோட்டினூடாக கோணாவத்தை ஓயவினூடே கடற்கரை வரையும்;

கிழக்கு :

இறுதியாக கூறப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி கடற்கரை வழியாக அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் அமைந்துள்ள பொது இடுகாட்டின் வடக்கு எல்லை வரை;

தெற்கு :

இறுதியாக சொல்லப்பட்ட புள்ளியிலிருந்து மேற்கு நோக்கி மேற்கூறிய இடுகாட்டின் வடக்கு எல்லையினூடாக (நகர் பிரிவு - 05 கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியின் மத்திய புள்ளி வரை சென்று, அங்கிருந்து வடக்கு, மேற்கு நோக்கி (நகர் பிரிவு - 04, கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியின் மத்திய கோட்டினூடாக பழைய பொதுச் சந்தையின் (தற்போதைய பஸ் தரிப்பு நிலைய வளாக) வடகிழக்கு எல்லை வரை சென்று, அங்கிருந்து தெற்கு நோக்கி பழைய பொதுச் சந்தையின் கிழக்கிலுள்ள வீதியின் மத்திய கோட்டினூடாக பழைய பொதுச் சந்தையின் தென் கிழக்கு எல்லை வரைச் சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி பழைய பொதுச் சந்தையின் தென்புற எல்லையினூடாக (நகர்ப்பிரிவு - 01 கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) அக்கரைப்பற்று - சாகாம வீதியின் மத்திய புள்ளிவரை சென்று அங்கிருந்து அக்கரைப்பற்று - சாகாம வீதியின் மத்திய கோட்டினூடாக வடக்கு நோக்கி அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியின் மத்திய கோட்டினூடாக இஸ்மாயில் ஸ்டோர் வீதி சந்தியை அடைந்து அங்கிருந்து மேற்கு நோக்கி இஸ்மாயில் ஸ்டோர் வீதியின் மத்திய கோட்டினூடாக (அக்கரைப்பற்று - 02 கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) தோம்புதோர் வீதியை சந்தித்து அங்கிருந்து மேற்கு நோக்கி தோம்புதோர் வீதியின் மத்திய கோட்டினூடாக (அக்கரைப்பற்று - 03 கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) முதலியார் வீதி வரை சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி முதலியார் வீதியின் மத்திய கோட்டினூடாக (அக்கரைப்பற்று - 19 கிராம சேவகர் பிரிவின் கிழக்கு எல்லை) அக்கரைப்பற்று - அம்பாறை வீதியைச் சந்தித்து அங்கிருந்து மேற்கு நோக்கி அக்கரைப்பற்று - அம்பாறை வீதியின் மத்திய கோட்டினூடாக (அக்கரைப்பற்று - 19 கிராம சேவகர் பிரிவின் தென்புற எல்லை) அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையின் தென்கிழக்கு எல்லை வரை சென்று அங்கிருந்து அவ்வைத்தியசாலையின் கிழக்கு, வடக்கு எல்லையினூடாக அவ்வைத்தியசாலையின் மேற்கில்

*உள்ள வீதியின் மத்திய புள்ளிவரை சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி அவ்வீதியின் மத்திய கோட்டினூடாக அக்கரைப்பற்று - அம்பாறை வீதியின் மத்திய புள்ளி வரை சென்று அப்புள்ளியிலிருந்து மேற்கு நோக்கி அக்கரைப்பற்று - 19ம் கிராம சேவகர் பிரிவின் தெற்கு, மேற்கு எல்லைகளினூடாகவும் அக்கரைப்பற்று - 21 கிராம சேவகர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாகவும் அக்கரைப்பற்று - அம்பாறை வீதியின் மத்திய கோட்டின் ஊடாக பட்டியடிப்பிட்டி பாலத்தின் மத்திய புள்ளி வரையும்;*

மேற்கு :

*இறுதியாகக் கூறப்பட்ட புள்ளியிலிருந்து நேர்வடக்கே தில்லையாற்றினூடாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நடைமுறையிலுள்ள தெற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் ஆகும்.*

*1 - 414 / 2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*